விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 14 றம்ழா 27 இதழ் 134
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-6-84

## யாழ். பல்கலைக்கழக மாணவர் இன்று
# விரிவுரைகளுக்கு திரும்புவர்!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு இன்று வகுப்புகளுக்குத் திரும்பவுள்ளதாக, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருவதில் பல்கலைக் கழக நிர்வாகம் அக்கறை கொண்டு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

நேற்று மாணவர்கள் கோரிக்கைக்குத் தீர்வு வழங்கும் முகமாக மேலிடத்திலிருந்து கிடைக்கப்பட்ட முடிவைக் கொண்டு துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மாணவர்களுக்குப் பின்வரும் அறிவித்தல் ஒன்றைவிடுத்தார்.

''பூபாலசிங்கம் என்னும் மாணவர் யாழ்ப்பாணச் சிறையில் இருக்கிறார் என்பதும் அவரைப்பற்றிய அறிக்கை சட்டமா அதிபரிடம் பொலிசாரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பொலிஸ் அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

''சேகர் என்ற மாணவர்

[10ம் பக்கம் பார்க்க]

## யாழ் – கண்டி பஸ் சேவை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கண்டிக்கும்இடையே பஸ் சேவைஒன்றை வடபிராந்தியபோக்குவரத்துச்சபை ஆரம்பிக்கவுள்ளது.

ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இச்சேவை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7-30 க்குப் புறப்படும் பஸ் மாலை 6 மணிக்கு கண்டியைச் சென்றடையும் என்றும் காலை 7-30 மணிக்கு கண்டியில் இருந்து புறப்படும் பஸ் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரும்என றும்போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

## வடபகுதி முகாம்களில் தங்கியுள்ள
# மலையக அகதிகளுக்கு
# நிரந்தர குடியிருப்பு!

## அமைச்சர் இராஜதுரை உறுதி

(கொழும்பு)

**ஜூலைக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு வட பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் நீண்டகாலமாக இருந்துவரும் மலையக மக்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதிகளைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுப்பதாகப் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராஜதுரை உறுதியளித்துள்ளார்.**

இந்த முகாம்களில் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்களை அரச காணிகளிலும், பிரஜாவுரிமை இல்லாதவர்களுக்குத் தனியார் காணிகளை வாங்கி அக்காணிகளிலும் குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவையினருக்கே அமைச்சர் இந்த உறுதியை வழங்கினர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் கடந்த பதினொரு மாதங்களாக தங்கியிருக்கும் அகதிகள் நிலை பற்றி பேரவையினர் அமைச்சருக்கு விரிவாக எடுத்து விளக்கினர்.

இதனைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் திரு. இராஜதுரை, சகல முகாம்களிலும் தங்கியுள்ள அகதிகளின் விபரங்களைச்சேகரித்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

பேரவையினர் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், இ.தொ.கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோரையும் சந்தித்து தமது நிலைமையை விளக்கிக் கூறினர்.

## லலித் புதுடில்லிக்கு நேற்றே பயணமானர்!

(கொழும்பு)

இன்று புறப்படவிருந்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றே புதுடில்லிக்கு பயணமானர்.

புதுடில்லியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும்இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதிக்கு உதவுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்

தற்போது லண்டனில் இருக்கும் ஜனாதிபதி ஜயவர்த்தன எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளது தெரிந்ததே.

## பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதமர்!

(கொழும்பு)

தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி புதுடில்லி சென்றுள்ளதால் இவ் அமைச்சுக்களின் பதில் அமைச்சராக பிரதமர் திரு ஆர். பிரேமதாசா இன்று பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

## "இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதில் இந்திரா மிகுந்த ஆர்வம்"
### — அமிர்தலிங்கம்

(திருச்சி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பிரச்னைகள் இருந்தபோதிலும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, இலங்கை ஜனதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவை இந்தியாவுக்குப் பேச்சுவார்த்தைக்காக அழைத்திருப்பதையிட்டே அவர் இந்த நன்றியைத் தெரிவித்தார்.

திருச்சியில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் பேசினர்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

''இலங்கைத் தமிழர் பிரச்சனை தீரவேண்டுமென்பதில் திருமதி இந்திரா காந்தி மிகுந்த அக்கறையுள்ளவராக இருக்கிறார்; ஜனதிபதி தம்முடன் பேச அழைத்திருப்பது இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

## "முழு அளவில் ராஜதந்திர முயற்சி"

(சென்னை)

''இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சகல ராஜதந்திர முயற்சிகளையும் இந்தியா மத்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

கரூரில் வர்த்தக கழகம் ஏற்

(10-ம் பக்கம் பார்க்க)

## "பஸ் ஓடிக்கொண்டிருந்தபோது வெடிச்சத்தங்கள் 'கேட்டன"
### திருநெல்வேலிச் சம்பவம்:
### மரண விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''பஸ் ஓடிக்கொண்டிருந்த போது வெடிச்சத்தங்கள் கேட்டன. நான் பஸ்ஸிற்குள் படுத்துவிட்டேன். சிறிது நேரத்தில் நான் பார்த்தபோது பின்பக்க கதவுக்கு அருகிலுள்ள ஆசனத்தில் கனகரத்தினம் மல்லாந்து கிடந்தார். சாரதி தளையசிங்கத்தின் கன்னத்திலிருந்து இரத்தம் வழிந்தோடிக்கொண்டிருந்தது''

திருநெல்வேலி துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பலியான கொடிகாமத்தைச் சேர்ந்த வடபிராந்திய போக்கு வரத்துச் சபை டிப்போ இன்ஸ்பெக்டர் எஸ். கனகரத்தினத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த கண்டக்டர் ரீ. கே. வெள்ளிமலை மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான், எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலைஇம்மரண விசாரணை நடைபெற்றது.

**காசுகொண்டுபோனேம்**

கண்டக்டர் வெள்ளிமலை

(10ம் பக்கம் பார்க்க)

## கடத்தல்காரர்கள் கடலில் குதித்துத் தப்பினர்
### பொருட்கள் சிக்கின

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்தி வரப்பட்ட 5லட்சம் ரூபா பெறுமதியான வீடியோ டெக்,மற்றும் துணிவகைகளை இந்தியா சுங்கப் பகுதி

(10-ம் பக்கம் பார்க்க)

## "வடக்கில் பயங்கரவாதம் தெற்கிலும் ஆரம்பிப்போம்"
### அனுராதபுரத்தில்துண்டுப்பிரசுரவிநியோகம்

(கொழும்பு)

''வடக்கில் பயங்கரவாதம்; தெற்கிலும் ஆரம்பிப்போம்''.

''மாணவர்களின் [illegible] துக்குப் பொறுப்பாக [illegible] அரசாங்கத்தை ஒழிப்போம்''.

மேற்கண்ட வாசகங்கள் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் அனுராதபுரத்தில் நேற்று [illegible] உள்ளதாகக் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளைப் பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்ட பின்னர் பாடசாலை, பல்கலைக்கழகங்களின் நிலைமை

(10ம் பக்கம் பார்க்க)

## இரு மாணவர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

சந்தேகத்தின்பேரில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மூவரில் இருவர் விசாரணையின்பின் நேற்று நண்பகல் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சலாவுதீன், சந்திரகுமார் ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மிருசுவில் ஸ்ரேசனுக்கு முன்பாக பலவித பிரயோசனங்களுடனுன 75 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், 494

தொட்டிலடி சண்டிலிப்பாயில் 5பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- மல்ரி சேவிசஸ் 37,(351)மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 516

நாளாந்தம் வாடகைக்குக் கொடுத்து வரும் 100 இரும்புக் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் S. கனகலிங்கம் மே/பா S. நாகராஜா ஆசிரியர் கலா கிறைண்டிங்ஸ் மில்ஸ், திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி. 533

சங்கரத்தை திக்கிராய் குளத்துக்கும் முருகமூர்த்தி கோயிலுக்கும் இடையில் ரோட்டோரமாக நெற்காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. அ. செல்வநாயகம், வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி. 551

வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் ஒழுங்கையில் ஒன்றரைப்பரப்புக்காணி விற்கப்படும். விளம்பர இல, 524 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 524

நல்ல நிலையிலுள்ள 2 TV உடன் விற்பனைக்குண்டு. கோல்ஸ்ரார் 17''B/W பிலிப்ஸ் 17'' B/W. தொடர்பு: B.A சாள்ஸ் No. 3 மருதடிவீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 540

## தேவை

நல்ல நிலையிலுள்ள பேப்பர் வெட்டும் இயந்திரம் தேவைப்படுகின்றது(PaperCutter Electric) ஆலை வேலை செய்யக் கூடியது. விலை விபரங்களுடன் அறியத்தரவும், S, கனகலிங்கம், முருகன் வீதி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 535

தையல் சிமோக்கிங்மெசின் எம்புறோய்டிங் வேலைகளில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர். காரியாலய நேரங்களில் நேரில் வரவும், நவா எம்போறியம் 16, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 539

பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி ஆகிய பகுதிகளிலோ அல்லது தெல்லிப்பழை, மல்லாகம், சுண்ணுகம் பகுதிகளிலோ சிறியவீடு ஒன்று வாடகைக்கு உடன் தேவை. வசதிகள், வாடகை விபரங்களுடன் விண்ணப்பிக்க: விளம்பர இல. 525 C/o ஈழநாடு யாழ்ப்பாணம், 525

கற்பூர வேலை செய்வதில் நன்கு அனுபவமுள்ள, (திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் உள்ளவர்கள்) 5 பெண்கள் உடனடியாகவேலைக்குத் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும், சகல வேலையும் நன்றாகத் தெரிந்திருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். தொடர்பு: S, கனகலிங்கம், முருகன்வீதி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 536

## தேவை

அனுபவமுள்ள கடைச்சல் இயந்திரத் தொழிலாளர் தேவை. போதிய அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும், அல்லது நேரில் வரவும். ஸ்ரார், வெலிங்டன் சந்தி. யாழ்ப்பாணம். 510

மரத்தளபாடங்கள் பொலிசிங் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 546

கணக்கியல்துறையில் நீண்டகால அனுபவமுள்ள கணக்காளர் (Book Keeper) விபரங்களுடன் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ் 234, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 547

சென்னையில் (மற்ருசில்) வசிக்கும் தாய் தகப்பன் 12 வயசு மகள் அடங்கிய இலங்கைத் தமிழ்க் குடும்பத்திற்கு உதவியாக இருக்க ஓர் தமிழ்ப் பெண் தேவை. உணவு தங்குமிடம் சம்பளம்தாராளமாக வழங்கப்படும். இந்தியா செல்வதற்கு வேண்டிய கடவுச்சீட்டு பெறவேண்டிய உதவியும் செய்யப்படும். விரும்பியோர் குடும்ப விபரம், வயது, எதிர்பார்க்கும் சம்பளம் ஆகிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 538 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 538

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து 4 மைல் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் நவீன வசதிகளுடன் கூடிய வீட்டின் ஒரு பகுதி (Annexe) வாடகைக்கு உண்டு, சிறிய குடும்பத்திற்கு அல்லது வேலை பார்க்கும் பெண்களுக்கு உகந்தது. தொடர்பு: விளம்பர இல, 528 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 528

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியில் ஒரு பகுதி வீடு சிறுகுடும்பத்துக்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: இல, 6 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, 531

## வகுப்புக்கள்

I.C,M.A (A) 1984,Economics Revision, Question Discussion வகுப்புக்கள், அனுபவம் வாய்ந்த சிறப்புப் பட்டதாரி ஆசிரியரினால், திங்கள், புதன்கிழமைகளில் மாலை 4-00- 5-30 வரை, நடைபெறுகின்றது. மாணவர் சேரலாம். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (மேல்மாடி) சாந்தித் தியேட்டர், அருகாமை யாழ்ப்பாணம். 545

விஞ்ஞான முறையில் சட்டை வெட்டித் தைத்தல், கேக்ஐசிங், சிற்றுண்டிவகைகள் தயாரித்தல், Hair Styles, பூக்கள் தயாரித்தல் ஆகிய வற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் 2 மணிக்கிடையில் தொடர்பு கொள்க. The Ladies Academy இல; 27/3-வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, (சாமி அன் கோ அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவிலுள்ளது) யாழ்ப்பாணம் 537

## வகுப்புக்கள்

Pharmacist Course (External) Dr. Gnanapandithan அவர்களால் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றன. மீண்டும் ஆரம்பம்30-6-84சனிக்கிழமைகாலை. சு.பாலசுப்பிரமணியம் யாழ். கல்வி நிலையக் கட்டிடம் மேல் மாடி (சாந்தித் தியேட்டர் அருகே) 22,,இராமையாச்செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். 548

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு டயரியும், ஒரு கணக்குக்கொப்பியும் சேர்ந்த ஒருபார்சல் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்திர சந்தியில் அமைந்துள்ள C. S. K. கட்டிடத்தில் இருக்கின்ற ஹாஜி அப்பாஸ் சன் கடையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் 517

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த நாகலிங்கம் மகேந்திரனின் மரணசாதனச் சொத்துக்கள் விடயத்தில் (காலஞ்சென்றவர்) நாகலிங்கம் மகேந்திரன் கைம்பெண் மல்லிகாராணி, உரும்பிராய், கிழக்கு உரும்பிராய்.

மனுதார்

வழ. இல: தத்துவம்/3786

எதிராக

1. தம்பிப்பிள்ளை சேனுதிராஜாவும்
2. பெண் பின்னல்கிளியும்,
3. நாகலிங்கம் தில்லையம்பலம்,
4. நாகலிங்கம் கனகேஸ்வரன்,
5. நாகலிங்கம் ஜெகநாதன்,
6. சோதிலிங்கமும் பெண்
7. மகேஸ்வரியும் எல்லோரும், உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள காலஞ் சென்ற நாகலிங்கம் மகேந்திரனுல் நொத்தாரிஸ் பொ. காங்கேயன் முகதாவில் 23-8-80ல் 2999ம் இலக்கத்தில் முடிக்கப்பட்டுள்ள மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 29ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்று காரணம் காட்டுவதற்கு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இந்த 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 7ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
கு.குலசிங்கம்
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது
பொ.காங்கேயன்
மனுதாரின் சட்டத்தரணி

532

## வியாபாரம் பெருக

## விளம்பரம் செய்க

## WANTED

Applications are invited in own hand writing with aptitude in Electronics to be trained in Colombo as Photocopier Technicians for a period of three months. Training fee. of Rs.3,000-00 repayable in three equal instalments as monthly allowances. A deposite of Rs. 2,500-00 also required which is repayable after satisfactory completion of two years service contract. Good prospects - 484, Hospital Road, Jaffna. 549

## ஆலய பரிபாலன சபைக் கூட்டம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் பிரஸ்தாப சபையின் தலைவரும் உருத்திரபுரம்கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்க தலைவருமான திரு. ஆ. செல்லத்துரை தலைமையில் எதிர்வரும் 30ம் திகதி மாலை நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பரிபாலன சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும்.


வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின்
பணத்தை திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு.
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

உஷா!!! குளிர்சாதனப் பெட்டி
முற்பணம்: Rs. 2700/- மாதாமாதம்: Rs 290/-
(5 வருட உத்தரவாதம்)
த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்
TFC
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680


மானிப்பாய் இந்துக் கல்லூரி
தொழில் நுட்பப் பிரிவு

## திட்டப்படம் வரைதல்

(CIVIL DRAUGHTSMANSHIP)

## போதனையாளர் தேவை

இந்நெறியில் தகமை பெற்றோரிடமிருந்தும், அரசாங்கத் திணைக்களங்களில் இவ்வேலையில் ஈடுபட்டு இளைப்பாறியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி: 02-07-1984 (திங்கள்)

அதிபர்.

((537)


ஜே என்ரப்பிரைசஸ்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

சவுதியில்:-
சாரதிகளும்
கூலியாட்களும்
உடன் தேவை: 3 கிழமைகளுக்குள் அனுப்பப்படும்.

பாஸ்போட், சமயச்சான்றிதழ், பாஸ்போட்டில் உள்ள படம் 6 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

T. துரைசிங்கம்
மல்வம்,
(உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்)
உடுவில், சுன்னுகம்.
விண்ணப்படிவம் இன்றிலிருந்து பாரம் எடுக்கப்படும்.

Labour Licence No: 426.
No: M/ D/ A 12627

550


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கதவு தட்டும் சத்தம் கேட்டாலும் குலை நடுக்கம் ஏற்படும்!'

## இந்து—சீக்கியர்கள் அனுபவம்பற்றி இந்திரா

புதுடில்லி, ஜூன் 27

பஞ்சாப் பிரச்னைகளின் அபாயத்தை எதிர்க்கட்சிகள் உணரத்தவறிவிட்டன என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று தலைநகரில் நடந்த கட்சிக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''நானும் எனது கட்சியும் ஆட்சிக்கு வந்தது வாக்குச்சீட்டுக்களினால்தான் என்பதை; எவரும் மறுக்கமாட்டார்கள் துப்பாக்கித் தோட்டாக்களினால் அல்ல என்பதையும் நன்கு அறிவார்கள்'' என்றும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

பஞ்சாப் பகுதிக்கு விஜயம் செய்து, அங்கு பொற்கோவிலுக்குச் சென்று பார்வையிட்டதையும், அங்குள்ள இந்து-சீக்கிய மக்களைச் சந்தித்துப்பேசிய அனுபவத்தையும் விபரமாக எடுத்துக் கூறினார்.

''பல இந்து சீக்கியரைச் சந்தித்து கடந்த காலத்தில் அவர்கள் அனுபவித்து வந்த சித்திரவதைகளைக் கேட்டறிந்தேன். அவர்கள் இப்போது அமைதியான வாழ்க்கையை வாழ்கிறார்கள். பிரச்னைகள் நடந்துகொண்டிருந்த காலத்தில், யாராவது வீட்டுக் கதவைத் தட்டினால்கூட அங்கு வாழும் குடும்பத்தினருக்கு குலைநடுக்கம் ஏற்படுமாம்'' என்று பிரதமர் கூறினார்.

''பஞ்சாப்பில் மக்கள் அனுபவித்த கஷ்டங்களைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விரும்பியதேயில்லை. பிரச்னைகளை வளர்த்து, அதன் மூலம் அரசியல் லாபம்தேட முற்பட்டார்கள். உரிய நேரத்தில் எடுத்த நடவடிக்கையினால், மக்கள் காப்பாற்றப்பட்டுவிட்டார்கள்'' என்றார் பிரதமர்.

''தவறான-விஷமத்தனமான பிரசாரங்களை நடாத்துகிறவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன். மக்களைத் தவறான பாதைக்கு திசைதிருப்பாதீர்கள். அவர்கள் நிம்மதியாக வாழட்டும். வகுப்புவாதத்தைக்கைவிட்டு, நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்க வாருங்கள்'' என்று இந்திரா அழைப்பு விடுத்தார்.

# பஞ்சாப் பிரச்னையில் சி. ஐ. ஏ.க்குத் தொடர்பா?

புதுடில்லி, ஜூன் 27

பஞ்சாப் பிரச்னையில் சி.ஐ.ஏ. யினருக்கும், சீக்கியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக வெளிவந்த செய்திகளை டில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது.

பாகிஸ்தானுடன் சேர்ந்து அமெரிக்க உளவறியும் படையான சி. ஐ. ஏ. நிறுவனம் இந்திய அரசுக்கு எதிராக இயங்கியதாக பி.ரி.ஐ. செய்திகள் வெளியிட்டன. கைதான சீக்கியத்தலைவர்கள் விசாரணைகளின்போது வெளியிட்டதாகக் கூறி, அவற்றை ஆதாரமாகக்கொண்டு சி. ஐ. ஏ. பற்றிய செய்திகளை பி. ரி. ஐ. வெளியிட்டது. இது தொடர்பாக, டில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி மைக்கோல் என்பவர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

'அந்தச் செய்தியில் எந்த உண்மையுமில்லை. இந்தியா சக்திமிக்க ஒருநாடாக விளங்க வேண்டுமென்பதேஎமது உறுதியானவிருப்பம் ''இந்தியாநாட்டுக்குஎதிரானவகையில் இயங்கமாட்டோம்'' என்றுகுறிப்பிட்டுள்ளார்'

பஞ்சாப்பிரச்னையில் 'எந்த விதமாகவும்' நாம் ஈடுபடவில்லை என்பதைத்திட்டவட்டமாக அறிவிக்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 'வடபகுதி ஆசிரியர்களுக்கு நேரத்துக்குச் சம்பளமில்லை!'

(மானிப்பாய்)

வடபகுதி ஆசிரியர் சம்பளம் உரிய காலத்தில் பெற முடியாமலிருப்பது பற்றியும் ஆசிரியர் சம்பள உயர்ச்சி கிடைப்பதில் தாமதமேற்படுவதாகவும் இதற்கு ஏற்றநடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட பிரசாரச்செயலாளர் திரு ந. சிவபாதம் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

பொதுச் செயலாளருக்கு அவர் எழுதிய கடிதத்தில், ஆனி மாதச் சம்பளம் பெறுவதில் ஆசிரியர் பெரும் சிரமம் அடைந்துள்ளதாகவும் தமது சம்பளப் பட்டியலைப் பெறுவதற்கு அதிபர்கள் 19ந் திகதியும் 20, 21ந் திகதிகளிலும் கல்வி இலாகாசென்றுகாத்திருந்ததாகவும் 22ந் திகதி கூட சில பாடசாலைகளுக்குச் சம்பளம்வழங்க முடியாமலிருந்ததாகவும் அதிகதூர இடங்களிலிருந்தும் அதிபர்கள் கல்வி இலாகாவுக்கு வந்து அன்று முழுவதும் காத்திருக்கவேண்டியேற்பட்டது துர்அதிர்ஷ்டவசமான தென்றும் இதுவரை 20ந் திகதி ஆசிரியர் சம்பளம்பெறும் வாய்ப்பு இருந்ததாகவும் சில மாதங்களாக ஆசிரியர் சம்பளம் உரிய காலத்தில் கிடைக்காமலிருந்து வருவதாகவும்இதுபற்றிகல்விப் பணிப்பாளருடன் கதைத்து ஆசிரியர்களுக்கு 20ந் திகதி சம்பளம்பெற ஆவன செய்யுமாறு கேட்டுள்ளார்.

சில பகுதி பாடசாலை ஆசிரியர் சம்பளம் பெறும் வங்கிகள் ஆசிரியர் சம்பளம் வழங்காமல் இருப்பதால் முதலில் குறிப்பிட்ட வங்கியிலிருந்து சிபார்சு பெற்று யாழ். இலங்கை வங்கியில் பெறச்செல்லும் துர்ப்பாக்கிய நிலையினால் சம்பளப் பட்டியல் கிடைத்தும் உடன் சம்பளம் பெற முடியாமலிருக்கிறது சம்பளப் பட்டியல்தாமதமாகக் கிடைப்பதால் ஆசிரியர் இதனால் மேலும் பாதிப்படையவேண்டியுள்ளது.

அவ்வாறு ஆசிரியர் சம்பளம் வழங்கமுடியாமலிருக்கும் வங்கிகளிலிருந்து ஆசிரியர் சம்பளத்தைநாட்டின்தற்போதைய நிலை கருதி யாழ். இலங்கை வங்கிக்கே காசோலைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டியிருக்கிறார்.

# நயினை நாகபூஷணி உற்சவம் இன்று ஆரம்பம்

(மானிப்பாய்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நடைபெறும் மகோற்சவத்தில் அடுத்த மாதம் 7ம் திகதி மஞ்சத் திருவிழாவும், 10ம் திகதி சப்பரத் திருவிழாவும், 11ம்திகதிதேர்த் திருவிழாவும், 12ம் திகதி தீர்த்தமும், 13ம் திகதி பூங்காவனம் நடைபெற்று மகோற்சவம் முடிவடையும்.

வருடாவருடம் நடைபெறும் உற்சவம் 1981-ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று 1983 ம் ஆண்டு ஆவணி மாதம் 20-ம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்று இம்முறை மகோற்சவம் நடைபெறுகிறது.

ஆலய திருப்பணி வேலைகளில் கல்யாண மண்டபம் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. தென்வாயில் இராஜகோபுரம்அமைக்கப்பட்டுள்ளது.

உற்சவகாலங்களில் போக்குவரத்து சுகாதார வசதிகளை சிறப்பாக மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கொடியேற்றத் திருவிழாவினை முன்னிட்டு இன்று அமுதசுரபி அன்னதான சபையினரால் அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். (சு)

# ம. பொ. சி. பெயரில் ரூ. 8 லட்சம் அறக்கட்டளை

★ தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, ஜூன் 27

தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவரான சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானகிராமணி பெயரில் எட்டுலட்சம் ரூபா அறக்கட்டளை ஒன்று நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தமிழக அரசு இதனை ஆரம்பிப்பதாக, தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் அறிவித்தார்.

நேற்றுசென்னையில் ம.பொ. சி. 79-வது வயதில் காலடி எடுத்து வைப்பதை கௌரவித்து விழாவொன்று நடந்தது.

மா. பொ. சி. எழுதிய 'விடுதலைப்போரில் தமிழர்' என்ற நூலை தமிழ்நாடு அரசு ஒரு லட்சம் ரூபாய் 'ராயல்ட்டி' கொடுத்து வாங்கியுள்ளதாகவும் எம். ஜி. ஆர். தெரிவித்தார்.

இந்த நூல் மாநில அரசின் உடமையாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ம. பொ. சி. யின் தமிழ் அரசியல் பணிகள் குறித்து எம். ஜி, ஆர். உட்பட பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

★ சீவல் தொழிலாளியின் பரிதாபச்சாவு—

# தென்னைமரத்திலிருந்து விழுந்து மரணமானர்

(கிளிநொச்சி)

சீவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் தென்னைமரத்தில் இருந்து தவறுண்டு விழுந்து மிகவும் பரிதாபகரமாக மரணமானார்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் வசித்துவந்த கதிர்காமு மாசிலாமணி (52வயது) என்பவரே மரணமானவராவார். இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியம் கே. சிவசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜர் செய்தனர். சடலபரிசோதனையை சட்டவைத்திய அதிகாரி திருமதி தேவதாசன் மேற்கொண்டார்.

மரணமான மாசிலாமணி கிளிநொச்சி தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும் முன்னைநாள் உபதலைவரும் என்றும், சீவல் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது தவறுண்டு தென்னைமரத்தால் விழுந்தார் எனவும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு மாணமானர் எனவும் மரணவிசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

விபத்து மரணம் என மரண விசாரணை அதிகாரி யோகலிங்கம் தீர்ப்புவழங்கினார்.

# பாடசாலை அபிவிருத்திச்சபை தீர்மானம்

(சரவணை)

சரவணை நாகேசுவரி மகா வித்தியாலய அதிபராகப் பட்டதாரி ஆசிரியரான திரு. கே. கணேசலிங்கத்தை நியமிக்க வேண்டும் எனக் கல்விப் பகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை பிரஸ்தாப வித்தியாலய ''அபிவிருத்திச் சபை'' ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

அதிபர் திரு. வி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. இராமலிங்கம் (அதிபர்), காரியதரிசி திரு. வை. குருமூர்த்தி, தனாதிகாரி திரு. வை. கேதாரநாதன் நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

# 'இலங்கை ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தல்' – லண்டனில் ஜனதிபதி

லண்டன், ஜூன் 27

இலங்கையின் ஜனநாயகம் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக ஜனதிபதிஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்தில் தூதுவர் சந்திரா மொனராகலை அளித்த விருந்துபசாரத்தில் ஜனதிபதி பேசினார். அப்போது, ''இலங்கையில் ஜனநாயகத்துக்கு பயங்கரவாதத்தினால் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

''தமிழர் ஒருவரை ஜனதிபதியாகத் தெரிவு செய்வதற்குக்கூடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அந்தளவுக்கு ஜனநாயகத்தைப் பேணிக்காக்கிறோம். பிரிட்டனிடமிருந்து பெற்ற பாரம்பரியம் பின்பற்றப்படுகிறது; ஆனாலும் பயங்கரவாதிகளினால் நாட்டுக்குப் பெரும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகிறது'' என்று கூறினார் ஜே. ஆர்.

ஜூலையில் நடந்த சம்பவங்களைப்போன்று இனி எப்பொழுதுமே நமது நாட்டில் நடக்காது என்றும் சொன்னார் ஜனதிபதி.

அவர் மேலும் சொன்னார்: பயங்கரவாத நடவடிக்கையை நிறுத்தும்பட்சத்திலேயே, தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு சுமூகமான முடிவு ஏற்படமுடியும் அப்பாவித்தமிழர் பலர் இந்தப் பயங்கரவாதிகளினால் சுடப்பட்டு மாண்டுள்ளனர். பயங்கரவாதிகளுக்குத் தனி நாடு அமைப்பது நோக்கமல்ல. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

துணி அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது நம் மனம் அழுக்கில்லாமல் இருக்க வேண்டும். அதற்கு அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானம் தான் வழி.

— கொஞ்சிப்பரியவர்

## நமது நோக்கு

# நீதிவான்களும் நீதித்துறையும்

கண்டி நீதிபதி திரு. சந்திரதாச நாணயக்காரவின் அலுவலக அறைக்குள் பலவந்தமாக புகுந்து அவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்க எத்தனித்த ஒருநபருக்கு மூன்று நீதியரசர்களைக் கொண்ட மேல் முறையீட்டு நீதிமன்றம் ஏழுவருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இந்த வழக்கில் அரசு தரப்பில் தோன்றிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திரு. டபிள்யூ. எஸ். பி. வடுகொடபிட்டிய இம் மாதிரியான செயல்கள் நடைபெறுவதை அனுமதித்ததால்நீதித்துறையின் செயல்பாடுகளே முற்றாக வீழ்ச்சியுறுவதற்கு அனுமதித்ததாகமுடியும். மேலும் குற்றம் புரிகிறவர்கள் நீதிவான்களைப் பயமுறுத்தி விட்டுத் தப்பிக் கொள்ள முடியும் என்று பொது மக்களும் நினைக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீதித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் மனிதர்கள் தாம், அவர்கள் தேவர்கள் அல்லர்; ஆனால் அவர்கள் செயல்படுவதற்கான சட்டதிட்டங்கள் தெளிவாக எழுதி வைக்கப்பட்டுள்ளன. அவைகளைச் சரிவரக்கடைப்பிடித்து ஒழுகுவதில் ஒழுக்கச் சீலர்களாய் இருப்பது அவசியம். அவ்வாறு ஒழுகி வந்தவர்களின் பாரம்பரியமும், மரபும் முறையாகப் பின் பற்றப்பட்டு வருகின்றமையால்தான் நீதித்துறை இன்றைய நிலையிலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது எனலாம்.

நீதித்துறை என்று நாம் எழுதும் பொழுது அரசியல் மட்டத்தில் பேசப்படும் நீதியையும், செயல்பாடுகளையும் தில்லுமுல்லுகளையும் நினைத்து வாசகர்கள் குழம்பலாகாது.

இலங்கையில் நீதித்துறை, என்ன தான் குறைகள் சொல்லப்பட்ட போதிலும் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை பொதுவாக எவரும் மறுக்கப் போவதில்லை.

சில வேளைகளில் அரசியல்வாதிகள் அல்லது சட்டப் பாதுகாவலர்கள் சட்டத்தைத் தம் கையில்எடுத்துக் கொள்ள முற்பட்ட போதிலும் நீதிமன்றம் என்று வரும்போது அங்கு தனிப்பட்ட செல்வாக்கு அடிபட்டுப்போய் விடுகின்றது.

நீதித்துறையின் மதிப்பும், கௌரவமும், அந்தஸ்தும், சுதந்திரமும் அரசமைப்பிலேயே உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன் நீதித்துறையைச் சார்ந்த சில பிரமுகர்களின் இல்லங்களின் முன் ஈடையர்கள் ஆர்ப்பரித்து அட்டகாசம் செய்து பயமுறுத்தல்களில் ஈடுபட்டதும், அதுபோன்று வேறு சில சம்பவங்களும் இத்துறையின் சுதந்திரத்தில் வெளிச்சக்திகள் ஊடுருவல் செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்ததைக் காட்டின. ஆனால் நெஞ்சுரமும், நீதித்துறையின் சுதந்திரத்தில் பற்றும் உறுதியும் கொண்டவர்களால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

நீதியை நிலைநாட்ட சபதம் எடுத்துக்கொண்டவர்களான நீதிபதிகள் அச்சமின்றியும் பதட்டமின்றியும் தம் கடமைகளைச் செய்ய வசதி இருப்பது அவசியம். கண்டிச் சம்பவமும், அது தொடர்பான வழக்கும் இதையே வலியுறுத்துகின்றன.

# ஊழல் மலிந்த கூட்டுறவு

"கூட்டுறவுக் கடையில் கூப்பன்புள்ளி வெட்டியவர் இன்று ஊரில் பெரிய புள்ளி"

கூட்டுறவுத் துறையில் நிலவும் ஊழல்களையும், ஊழல் புரியும் பெருச்சாளிகள் பெரிய மனிதர்களாகி விடும் விசித்திரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் மேற்கண்டவாறு ஒரு துணுக்கை எழுதியிருந்தார் இளைய தலைமுறை எழுத்தாளர் ஒருவர்.

இதற்கு புதுக்கவிதையென்று அவர் பெயரிட்டழைத்தது பொருந்தாவிட்டாலும் அதில் அர்த்தம் பொதிந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

அரசியல் செல்வாக்குள்ளவர்கள் கூட்டுறவுத்துறையில் நுழைய எத்தனிப்பது ஒருபுறமிருக்க அரசியல் செல்வாக்கைத் தேடுவதற்காகவும் கூட்டுறவுத்துறையில் நுழைவதற்கு முன்வருபவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களின்ஆசைகளுக்குத் தீனி போடுகிறவர்கள் பொதுமக்களின் நலன்களைச் சுரண்டும் பெருச்சாளிகளாகிவிடுகிறார்கள். இதனால் இத்துறையே இன்று சீரழிந்து போய்க் கிடக்கின்றது.

நாட்டிலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் எழுபத்தைந்து வீதமானவற்றின் இயக்குநர் சபைகளைக்கலைத்துவிடும் நிலைஅரசுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

இப்போதிருக்கும் சபைகள் கலைக்கப்பட்டு புதிய சபைகள் உருவாக்கப்படும் போதாகிலும் ஊழல்களில் சம்பந்தப்படாத - ஊர்மக்களின் நம்பிக்கையைப் பெற்றமனிதர்கள் இந்த நிர்வாகங்களில் இடம் பெறும்படி கூட்டுவுத்துறையினர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# பழம் பெருமையும் அருட்புதுமையும் உடைய நயினை நாகபூஷணி

சிவபெருமானை முன்னைப் பழம்பொருட்குப் பழம் பொருள், பின்னைப் புதுமைக்குப் புதுமையானவன் என்று மாணிக்கவாசகர் சொல்வது போன்று பழமைக்குப் பழமையாகவும் அருட் பொலிவில் புதுமைக்குப் புதுமையுடையதாகவும் விளங்குவது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும். இத்தலத்துக்கு சரித்திரப் பின்னணியும் தொன்மையான அருட்சிறப்பும் புதுமையான அருட்பிரவாகமும் உண்டு. நாகம் ஒன்று வழிபட்டு அருள்பெற்றதும் நாகத்தின் வழிபாட்டுக்கு உதவிய வணிகன் அம்பிகை அருளால் அளவிறந்த செல்வத்தை அடைந்து ஆலயப்பணி செய்து வழிபட்டதுமே இவ்வாலயத்தின் பழைமையான வரலாறாக விளங்குகிறது. இன்று மூலஸ்தானத்தில்அம்பிகைக்கு குடை பிடிப்பதுபோன்ற அமைப்பில் நாகம் ஒன்று அணிசெய்வதைக் கண்டு வணங்கக்கூடியதாகவுள்ளது. நாகபூஷணி என்னும் சொல் நாகத்தை ஆபரணமாகக் கொண்டவள் என்ற கருத்தை உடையதாகும். மணிவாசகர் சிவபெருமானைப் "பாம்பலங்காரப்பரன்" என்பார்.

வடமொழியில் சிவபெருமானுக்கு "சர்ப்பபூஷணன்" என்று வழங்கும் நாமத்துக்கு பொருத்தமான அம்பிகையின் நாமமாக நாகபூஷணி என்னும் நாமம் விளங்குவதிலிருந்து ஜகன்மாதாவாகிய - லோகநாயகியான உமையம்மையே நம்மையெல்லாம் ஆதரித்து அனுக்கிரகிக்க நயினையம்பதியில் வீற்றிருக்கிறாள் என்பதை உணர்ந்து வணங்கி இன்புறலாம்.

இத்தலத்தில் நேர்த்திக்கடன் நிறைவேற்றி வழிபாடு புரிந்து அம்பிகை அருள் பெறுவோரை ஆலயத்தில் நாமேநேரடியாகக் காண்பதிலிருந்து நயினை நாகபூஷணிஆலயம் இவ்வுலக வாழ்வாகிய துன்பக்கடலில் அலமந்து அவதியுறும் மக்களுக்கு பெருங்கரையாக பெருந்துறையாக இருப்பதைக் காணலாம்.

சக்தி வழிபாட்டின் சிறப்பையும் அவசியத்தையும் மட்டுமன்றி சக்தியைவழிபடும்முறையையும் போதிக்கும் சாக்த சமய சம்பிரதாயத்தின்படி உலகிலுள்ள சக்தி பீடங்களில் காஞ்சிகாமாட்சி ஆலயத்தைக் காமகோடி பீடம் என்றும் மதுரை மீனாட்சி ஆலயத்தைச் சியாமளா பீடம் என்றும் அழைப்பதுபோல நயினை புவனேஸ்வரி பீடம் என்று வழங்கப்படுகிறது இவ்வகையில் சக்தித்தலங்களில் மிக்க பெருமையுடன் நம் யாழ்ப்பாணத்தில் விளங்குவது நயினைநாகபூஷணி அம்பாள் ஆலயமேயாகும்.

**தி. பொன்னம்பலவாணர்**

# இலங்கையின் இனப் பிரச்னைக்கு அமெரிக்கா, பிரிட்டன், டில்லி!

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அமெரிக்காவுக்குச் சென்று அதிபர் றீகனையும் மற்றும் தலைவர்களையும் பிரமுகர்களையும் சந்தித்து இலங்கையின் "உண்மை நிலையை" எடுத்துக் கூறி 'விளக்கி'விட்டு வெற்றியோடு இப்போது பிரிட்டனுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பயங்கரவாதம் பற்றியும் உலகில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதறகு உலக நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியத்தையும் ஜனாதிபதி ஜே. ஆர். வலியுறுத்தியிருக்கிறார்.

பயங்கரவாதத்தை உலகில் ஒழித்துக் கட்டுவதற்கு இலங்கை ஜனாதிபதி அமெரிக்கா சென்று ஆலோசனை கூறுவதற்கு முன்னரே அமெரிக்கா முயற்சி செய்தது உலகறிந்த விஷயம். வியட்னாமில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்காக கோடிக்கணக்கில் அமெரிக்கா செலவிட்டதுடன் ஆயிரக்கணக்கில் அமெரிக்கர்களையும் பலிகொடுத்தது. அமெரிக்க மக்களின் பலத்த எதிர்ப்பினாலும் வியட்நாமியரின் எதிர்த் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமலும் கௌரவமாக அமெரிக்கா வியட்நாமிலிருந்து பின்வாங்கியதை உலகமறியும்.

பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமென்ற இலங்கை ஜனாதிபதியின் யோசனைக்கு அமெரிக்கா ஆதரவளித்துள்ளது. இலங்கையின் பிரிவினைக் கோரிக்கையையும் அமெரிக்கா ஆதரிக்கவில்லை.

பயங்கரவாதப் பிரச்னைக்கும் பிரிவினைக் கோரிக்கைக்கும் கொடுத்த முக்கியத்துவத்தை விட பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப் பிரச்னைக்கு விரைவில் சுமுகமான தீர்வுகாணப்பட வேண்டுவமன்பதற்கே அமெரிக்கா அதிக முக்கியத்துவமளித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஜே, ஆர். ஜயவர்த்தன அமெரிக்காவுக்கு விஜயம் செய்த சமயத்தில் செல்வாக்கு மிக்க இரண்டு அமெரிக்க செனட்டர்கள் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் வேற்றுமையை ஏற்படுத்தியிருக்கும் பிரச்னைகளுக்கு தாமதமின்றி உறுதியான சமாதானத் தீர்வைக் காணுமாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் இலங்கை அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றைச் செனட்டில் கொண்டு வந்திருந்தனர்.

புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப். கெனடியின் இளையசகோதரரான செனட்டர் எட்வர்ட் கென்னடியும் கலிபோர்ணியாவைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் சிரேஷ்ட செனட்டரான அலன் கிரான்ஸ்டனுமே இத் தீர்மானத்தை செனட்சபையில் தாக்கல் செய்திருந்தவர்களாவர்.

இலங்கை ஜனாதிபதி அமெரிக்காவிலிருந்தசமயம் "வாஷிங்டன் போஸ்ட்" என்னும் பத்திரிகையின் நிர்வாகிகளையும் ஆசிரிய குழுவினரையும் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்புக்கு முதல் இப் பத்திரிகையில் வெளி விவகார அமைச்சு இலங்கை பற்றி இரண்டு பக்க அனுபந்தம் வெளியிட்டிருந்தது. இதே இதழில் 'ஈழத்தமிழர் நண்பர்கள்' என்று அழைக்கப்படும் இயக்மொன்று அரைப்பக்க விளம்பரம் ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்த விளம்பரம் பற்றி அமெரிக்க ராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறுகையில் விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விஷயங்கள் பல "தவறானவை" என்று தெரிவித்தார்.

இலங்கையில் இரு சமூகத்தவர்களுக்கிடையிலுள்ள பிரச்னைகளுக்கு இப்போது நடைபெற்று வரும் சர்வகட்சி மாநாடு நல்லதொரு தீர்வு காண்பதற்கு உதவுமென அமெரிக்கா நம்புகிறதென்று அந்த சிரேஷ்ட அதிகாரி நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

அமெரிக்கத் தலைவர்களும் சரி' பிரிட்டிஷ் தலைவர்களும் சரி இலங்கையில் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதையே விரும்புகின்றனர்.

இனப்பிரச்னைக்கு சுமுகமான நிரந்தரமான தீர்வு காணவேண்டுமென்ற நோக்கத்துடன் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டபோது அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டுமல்லாது உலகநாடுகள் பலவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தெரிவித்தன.

நவசீனாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் ஜப்பானுக்கும் விஜயம் செய்த பின் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று சனிக்கிழமை புதுடில்லி செல்கிறார்.

ஜனாதிபதி விஜயம் செய்த நாடுகள் எல்லாம் இலங்கையின் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் நிரந்தரமான சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதையும் இலங்கையில் அமைதி நிலவவேண்டுமென்பதையுமே வலியுறுத்திக் கூறுகின்றன.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் நல்லெண்ணத்தினால் அவரது சிறப்புத் தூதுவர் திரு ஜி.பார்த்தசாரதி எடுத்த முயற்சியினால் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியாக சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

இந்த மாநாடு திசை திருப்பப் பட்டு இழுத்தடிக்கப்படுகிறது. 'பயங்கரவாதிகள்' பற்றியும் அவர்களைத் திருப்பி அனுப்புவது பற்றியுமே இப்போது இலங்கை அரசாங்கத் தலைவர்கள் பேசுகிறார்கள்.

இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வு காணப்பட்டால் பயங்கர வாதம் தானகவே இல்லாது போய்விடும்.

இதில் பிரிட்டனுக்குநிறைய அனுபவமுண்டு.

கென்யாவில் "மௌமௌ" இயக்கம் என்ற பயங்கர வாதத்தைஒழிக்கப்பிரிட்டன் பட்டபாடு கொஞ்சமல்ல!

கென்யாவில் மட்டுமல்ல இந்தியாவிலும் கூட பிரிட்டனுக்குப் 'பயங்கரவாதிகள்' பலர் இருந்தனர்.

**எஸ். எம். கோபாலரத்தினம்**

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி செய்திகள்

(நமது நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

### கிளிநொச்சி வித்தியாலய விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் வை. வேலாயுதம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கல்விப்பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூரும், சிறப்பு விருந்தினர்களாகக் குருகுலநிர்வாகியும், முன்னுள் அதிபருமான வே. கதிரவேலுவும், வண, பிதா ஜே. எம். மதுரநாயகமும், வட்டாரக் கல்வி அதிகாரி மா. சண்முகநாதனும் கலந்துகொண்டனர். பரிசில்களை ஜனுப் மன்சூர் வழங்கினுர். விளையாட்டுத் துறைச் செயலாளர் வி. சாமியும் உரையாற்றினுர்.

### சிரமதானம்

கிளிநொச்சி கந்தன்குளம் ஆனந்தநகர்ப்பகுதியில் உள்ள வீதிகளைச் சிரமதானம் மூலம் சீர் செய்யும் முயற்சியில் ஆனந்தநகர் கிராம அபிவிருத்திச் சங்கமும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஈடுபட்டுவருகின்றன. பிரஸ்தாப சங்கங்களின் அழைப்பை ஏற்று, வருகை தந்த அபிவிருத்திப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் க. குணராசா, திட்டமிடல் அதிபர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் சிரமதானத்தை ஆரம்பித்துவைத்தனர். திரு. எஸ். செல்லையா தலைமையில் சிரமதானம் நடைபெற்றுவருகிறது.

### அரசாங்க அதிபருக்கு வரவேற்பு

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெயநாதனுக்கு வட்டக்கச்சி மக்கள் வரவேற்பு உபசாரம் ஒன்றை அளித்துக்கௌரவித்தனர், கிராமோதய சபைத் தலைவர் திரு. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவம் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வட்டக்கச்சிப்பகுதி தேவைகளடங்கிய மகஜர் ஒன்றும் வைபவத்தில் வைத்து அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

### புனரமைப்பு

மிகவும் சீர்கேடடைந்த நிலை இருந்துவந்த கிளிநொச்சியில் உள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. பலவருடங்களாக செப்பனிடப்படாதிருந்த பழைய கொலனி கணேசபுரம், திருநகர், ஜெயந்திநகர்பகுதி வீதிகள் திருத்தம்செய்யப்பட்டு, போக்குவரத்திற்கு உகந்ததாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை கிளிநொச்சி, கரைச்சி ஆகிய பிரிவு உப அலுவலக நிர்வாக அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனுகவே பிரஸ்தாப வீதிகள் புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### மாணவன் தற்கொலை

இராமநாதபுரத்தில் மாணவன் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். அயல்வீட்டாருடன் சச்சரவிற்குச் சென்ற பிரஸ்தாபமாணவனைத் தந்தை கண்டக்கவே அவர் நஞ்சிடம் தஞ்சமடைந்தார்.

இ. சண்முகலிங்கம் (16-வயது) என்னும் மாணவனே மரணமானவராவார். மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மரணவிசாரணையை நடத்தித் தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினுர்.

# "தமிழுக்குரிய இடத்தைநாம் ஆங்கிலத்துக்கும் வழங்க வேண்டும்"

(மானிப்பாய்)

''நமது தாய்மொழி தமிழ். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'' என்ருர் பாரதியார். எமது தமிழ் மொழி வளர்ச்சிக்கு நாம் என்னென்ன செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் செய்தல் வேண்டும். தமிழ் மொழிக்கு நாம் எவ்வளவு அந்தஸ்துக் கொடுக்கிறேமோ அதே அந்தஸ்துஆங்கிலத்துக்கும் வழங்க வேண்டும். ஆங்கிலம் உலகப் பொதுமொழி. தமிழ் மக்களாகிய நாங்கள் உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்திலும் விற்பன்னர்களாக இருந்தால் தான் சர்வதேச அரங்கில் பிரகாசிக்கலாம் மொழிவளர்ச்சியின் பொருட்டுப் பாடசாலைகளில் தமிழ் ஆங்கில தினப் போட்டிகளை நடத்துவது வரவேற்கத்தக்கது. பெரிய பாடசாலைகளுக்குரிய வசதிகள் யாவும் உரும்பராய் சைவத் தமிழ்வித்தியாலத்துக்கு இல்லாதிருந்த போதிலும் மாணவர் கல்வியில் மொழித்திறனை ஏற்படுத்தும் நோக்கமாக தமிழ் ஆங்கில தினப்போட்டிகளை விரிவான முறையில் நடத்தி வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கமுன் வந்திருப்பதைக்கண்டுபெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்''

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் ஆங்கில தினப் போட்டிப்பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகப் பங்குபற்றிய இராமநாதன் கல்லூரி முன்னுள் அதிபர் திருமதி யோகலட்சுமி இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

அதிபர் திரு. வி. அரியநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது: மாணவர் மொழியில் தேர்ச்சியடையும் பொருட்டு ஏற்படுத்தியுள்ள தமிழ் ஆங்கில மொழித்தினவிழா மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும்பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. கல்விப்பாரம்பரியங்களைப் பேணிவரும் குடும்பத்தில் உதித்தவரும் கல்விமானுமான திருமதி யோ. இராசரத்தினம் அவர்கள் பிரதம விருந்தினராகப் பங்குபற்றியிருப்பது பெருஞ்சிறப்பைத் தருகின்றது என்ருர்.

பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில், உரும்பராயின் வளர்ச்சிக்காக உயிர் உள்ளவரை உழைத்தவர் கைதடி திரு. அ. இளையதம்பி அவரைப் பின்பற்றி வாழ்ந்து வருகிறது அவரது குடும்பம். அந்தக் குடும்பத்தில் பிறந்து உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிற் படித்து, உயர்தரக் கல்வியும் பெற்று, இராமநாதன் கல்லூரியின் ஆசிரியராயும், உப-அதிபராயும், அதிபராயும் பதவிகள் வகித்து வியத்தகு சேவை புரிந்த திருமதி யோ. இராசரத்தினம் மாணவர் உலகுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்ருர் என்ருர்.

தமிழ்ஆங்கில தினப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களைத் திருமதி யோ. இராசரத்தினம் வழங்கினுர்,

# நயினைநாகபூஷணி வழக்கில் மாவட்ட நீதிபதி கட்டளை

(யாழ்ப்பாணம்)

நயினுதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தனது 3/9 பங்கு பூசைக்காலத்தில்வரும் திருவிழா நாட்களில் தத்தமது உதவியாளர்களை நியமிக்கும் உரித்தினை எதிராளிகள் எவ்விதத்திலும் தடை செய்யக் கூடாது என ஊர்காவற்றுறை மாவட்டநீதிபதி திரு. பொ. பாலவடிவேல் கட்டாணை வழங்கியுள்ளார்.

நயினுதீவைச் சேர்ந்த சபாரத்தின குருக்கள் நடராஜ குருக்கள் இம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவில் நயினுதீவை சேர்ந்த தியாகர் திருநாவுக்கரசு, வேலுப்பிள்ளை பொன்னம்பலம் கந்தசாமி கனக சபாபதி இரகுப்பிள்ளை தியாகராசா, ஆறுமுகம் தியாகராசா, கந்தையா மகாலிங்கசிவம் நாகேசு சிவராசசிங்கம், சோமசுந்தரம் செல்வரத்தினம், அருளம்பலம் சண்முகநாதன் ஆகியோர் எதிராளிகளாக காட்டப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி பொ, பாலவடிவேல் முன்னிலையில் இம்மாதம் 21-ந் திகதி விசாரணை செய்யப்பட்டது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி இளங்கோவனின் அனுசரணையுடன், சட்டத்தரணி கோடீஸ்வரன் ஆஜரானுர்.

இவ்வழக்கில் அணைக்கப்பட்ட மனு சத்தியக்கூற்று ஆகிய ஆவணங்களையும் பரிசீலித்தபின் கட்டளை பிறப்பித்து கட்டாணை வழங்கப்பட்டது.

இக் கட்டாணையில் எதிராளிகள் தங்கள் இஷ்டம் போல் நியமனம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாதென்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இக்கட்டாணை இடைக்கால தடைக்கட்டளை விண்ணப்ப விசாரணைமுடியுமட்டும் அமுலில் இருக்குமென்றும் கட்டளையிடப்பட்டது. மேலும் இக்கட்டாணையை மீறினுல் எதிராளிகள் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கு தண்டிக்கப்படுவார்கள் என்றும் கட்டளையிடப்பட்டது.

இக்கட்டாணைக்கு ஏதும் ஆட்சேபனை இருப்பில் 84 ஜூன் 27ம்தேதி காலை 9 மணிக்கு நீதிமன்றத்தில் சமுகமளித்துதெரிவிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# "தமிழரின் கலை கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும்"

(கிளிநொச்சி)

''தமிழரின் கலை, கலாசாரம் பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த நோக்கில் செயல்பட்டு வரும் நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப்பண்பாட்டுக்கழகத்தின் தொண்டு போற்றுதற்குரியது.''


இவ்வாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பிராந்திய அலுவலக தமிழ்ப்பண்பாட்டுக்கழகம் கொத்தணிப் பாடசாலைகள் மாணவர் மத்தியில் நடத்திய பேச்சுப் போட்டி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பிராந்திய பிரதிப் பணிப்பாளர் ம. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் பிரஸ்தாப கழகத் தலைவர் க. சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் சி. சிவகுருநாதன், கல்வி அதிகாரி கே. சோமசுந்தரம், கொத்தணி அதிபர் திரு. கோபாலபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

ஆரம்ப பிரிவு: 1-ம் இடம் த. சாந்தகுமாரி (கனகபுரம், அ. பாடசாலை), 2-ம் இடம்: ஆ. கலைவதனி (புனித திரேசாள் வித்தியாசாலை), 3-ம் இடம்: ச. சக்தி (கி. ம. வி.), கீழ்ப்பிரிவு: 1-ம் இடம் சி. ஜீவா (க. அ. பா), 2-ம் இடம் சி. வானதி (பு. தி. வி), 3-ம் இடம் ஆ. கலைவாணி (பு. தி. வி.), மேற்பிரிவு: 1-ம் இடம் அ. மதிபவானி (பு. தி. வி.), 2-ம் இடம் வை. கோசலை (கி, ம. வி.) 3-ம் இடம் மு. நிர்மலா (ந. அ, பா.)

[illegible] திரு. நன்றியுரை கூறினார்.






# பாடசாலைக்கு காணியும் கட்டிடமும் அன்பளிப்பு!

(புலோலி)

புலோலி 'வேலாயுதம்' ஆண்கள் மாக வித்தியாலயத்துக்குக் அதன் அருகில் இருந்த சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான காணியும், கட்டிடங்களும் கையளிக்கப் பட்டுள்ளன. இவற்றை இப்பாடசாலை ஸ்தாபகரான அமரர் ரீ. இராமச் சந்திரனின் குடும்பத்தைச் சேர்ந்த திரு. வி. சிவஞான சேகரம் பிள்ளை வழங்கினுர்.

அன்பளிப்பு வைபவம் இப் பாடசாலைஅதிபர் திரு வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பீ. சச்சிதானந்தம்கலந்து கொண்டார்.

காணியுடன் சேர்த்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட கட்டிடத்துக்கு 'இராமச்சந்திரன் இல்லம்' என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது. (கி)

# அமெரிக்க சஞ்சிகையின் கதி

(க. ஜீவகதாஸ்)

சர்வதேச மட்டத்தில் சமாதானப்பணி புரிவதில் 1966ம் ஆண்டு தொடக்கம் முன்னணி வகித்து வந்த ''வின்'' எனும் பெயரைக்கொண்ட அமெரிக்க சஞ்சிகை தாங்க முடியாத கடன் பளு காரணமாக, தனது வெளியீட்டை நிறுத்திக் கொண்டது.

பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் அபிமானத்தையும், பாராட்டையும் பெற்று வெளிவந்த இச்சஞ்சிகை சுமார் 22,000 டொலர் பணத்தினைக் கடனுக வழங்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வு பெறுகிருர்

(பண்டத்தரிப்பு)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை அதிபர் திரு. பொ. தியாகராசா இம் மாதம் 30-ம் திகதி முதல் பதிவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். தொடர்ந்துசுமார் 17 ஆண்டுகள் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றும் இவருக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினுலும், மாணவர்களினுலும் சிறப்பான முறையில் சேவைநலம் பாராட்டு வைபவம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரின்ஸோ மேலும் அதிவெண்மைச் சலவை



## ...ஏனெனில் ரின்ஸோவின் முழுமையான நுரை, ஒழிந்திருக்கும் அழுக்கை இழுத்து வருகிறது. இதோ இப்படித்தான்:

1. உங்கள் அழுக்கு ஆடைகளை அப்படியே அரைமணிநேரம் ரின்ஸோவில் ஊறவிடுங்கள்.

2. ரின்ஸோவின் முழுமையானநுரை துணியின் ஒவ்வொரு துளையுள்ளும் ஆழமாக நுழைகிறது.

3. அதன் நுரை ஒழிந்திருக்கும் அழுக்குப் பகுதிகளை வளைத்துப்பிடித்து அவற்றின் இறுக்கத்தைத் தளர்த்துகிறது.

4. இப்பொழுதுநுரை அழுக்கைத்துணிகளின் மேற்பரப்புக்கு இழுத்துவருகிறது. எனவே துணிகளை மெய்யான தூய்மையும், மெய்யான வெண்மையுமாக்க சாதாரண தேய்த்தலொன்றே போதுமானது.






விலை:
பெரியது — ரு: 23: 75
நடுத்தரம் — ரு, 12. 50
பக்கட் — ரு: 2:40

இப்போது ! அடித்துத் தேய்த்துக் களைக்கும் வேலைக்கு நீங்கள் முழுக்குப் போட்டுவிடலாம், ஏனெனில் ரின்ஸோவின் முழுமையானநுரை, உங்கள் கடின வேலைகளைத் தனதாக்கித் துணிகளை மெய்யான தூய்மை, மெய்யான வெண்மையாக்குகிறது.

எங்கெங்கும் நவீன தாய்மார் ரின்ஸோ பாவிக்கத் தொடங்கியிருப்பதில் ஆச்சரியமில்லை!

## ரின்ஸோ, சலவைச் சிரமத்தை அறவே அகற்றுகிறது!

ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி.

HTL LB 1451


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கல்வி நிலைகுறித்து சரியான பாதை காட்டவேண்டும்!’

## அறிஞர்களுக்கு முருகையன் வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

‘‘இன்றைய கல்வி நிலையை நோக்கும்போது போதிப்பவற்றைக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து கொள்ளும் நிலையில் மாணவர்கள் இல்லை. பாடசாலைக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் ஓடியோடிச் சென்று போதனைகளை கேட்பதுடன் நின்றுவிடுவதால் சிந்தித்து தெளிந்து கொள்ள அவர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. இந்நிலையில் கல்வியின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது. எனஅஞ்சவேண்டியுள்ளது, ஆகவே கல்விமான்கள் அறிஞர்கள் சிந்தனையாளர்கள் போன்றோர் இன்றைய கல்வி நிலை பற்றி ஆராய்ந்து சரியானதோர் பாதையைக் காட்ட வேண்டும்’’

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு விழா நிறுவியவர் நினைவுநாள் விழா ஆகியவற்றில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் திரு. இ. முருகையன் கூறினார்.

கல்லூரி பதில் அதிபர் திரு. ஆர். இரத்தினேஸ்வர ஐயர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்வி நிலையங்களையும் நாடி கல்வியைபெற்றுக்கொள்ளும் நிலையைக் காண்கிறோம். பாடசாலைக் கல்வி சரியான முறையில் அமையாததால் தான் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடுகிறார்களா? எனவும் சிந்திக்க இடமுண்டு. ஆசிரியர்கள் தாம் படித்தவற்றை மேலும் விருத்திசெய்ய முன்வருவதில்லை. எல்லா ஆசிரியர்களும் அப்படியல்ல. திறமை வாய்ந்த ஆசிரியர்களையும் நாம் காண்கிறோம். ஆனாலும் கட்டிடங்கள், ஆய்வு கூடங்கள், அரசாங்க உதவிகள் எல்லாம் பாடசாலைகளில் கிடைக்கின்ற போதும் மூலைமுடுக்குகளில் கொட்டில்களில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் சிறப்பாக இயங்குவதை காண்கிறோம். அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கிறது.

பாடசாலைக் கல்வியும், தனியார் கல்வி நிலையக் கல்வியும் சேர்ந்து இன்றைய மாணவர்கள் மத்தியில் எப்போதும் பரபரப்பு என்று நிலையை தோற்றுவித்துள்ளது. அவர்களது உடலும், உள்ளமும் ஓய்வின்றி எந்நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைக்கு நிவாரணம் காண்பது அவசியமாகின்றது.

தனியார் கல்விநிலையங்களை இயங்கக்கூடாது என்று சட்டம் இயற்றி தடைசெய்ய வேண்டுமென சிலர் கூறுகிறார்கள். ஆனால் இந்த தனியார் கல்வி நிலையங்கள் சமுதாயத்திற்கு தேவைப்பட்டதனாலேயே அவை உருவாகின. அவற்றை திடீரென நிறுத்தினால் சமுதாயத்திற்கு பெரிதும் பாதிப்பு ஏற்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

இன்றைய கல்வித் திட்டம் பரந்த அறிவுள்ள கல்வியை மாணவர்கள் பெறக்கூடிய வாய்ப்பை கொடுக்கிறது. ஆனால் மாணவர்கள் கல்வியை சரியான முறையில் பெற்று அறிவை விருத்தி செய்து கொள்ள அவர்களுக்கு கால அவகாசம் போதாமல் உள்ளது இந்நிலையில் கல்வியின் எதிர்காலம் குறித்தும் நாம் அஞ்ச வேண்டியுள்ளது என்றார்.

## பல லட்சம் ரூபா செலவில் விடுதிக் கட்டிடம்

(கிளிநொச்சி)

பரந்தன் வை. எம். சி. ஏ. இயக்கத்தினர் பல லட்சம் ரூபா செலவில் விடுதிக் கட்டிடம் ஒன்றை கட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டி வீதியில் அரசினரால் வை. எம். சி. ஏ. இயக்கத்திற்கென வழங்கப்பட்ட காணியில் விடுதிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் பிரஸ்தாப இயக்கத் தலைவர் ஏ. கே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் நிறுவியார் நினைவுப் பேருரைஆற்றினார்,

திருமதி இ. முருகையன் பரிசில்கள் வழங்கினார்.

இறுதியில் திரு. சி. கைலைமகான் நன்றி கூறினார்.

## றமழான் சிந்தனை

### ஒன்று சேர்த்தல்

‘‘...செல்வம் உங்களிடையேயுள்ள பணக்காரர்களிடம் மட்டும் சுற்றிவராமல் இருக்கட்டும்......’’

நோன்பின் இறுதிநாட்கள் பணக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளநாட்களாகும். அதாவது அவர்கள், தங்கள் தயாளத்தைப்பிறருக்குக் காட்டுவதன் மூலம் அதனைப்பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளலாம்.

59வது அத்தியாயமான ‘‘ஹஷ்ர்- ஒன்று சேர்த்தல் என்பதில் 7-ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ள சிலவரிகள் அவர்களுக்கு அறிவுறுத்த அருளப்பட்டதாகவே இருக்கிறது.

‘‘—செல்வம் உங்களிடையேயுள்ள பணக்காரர்களிடம் மட்டுமே சுற்றிவராமல் இருக்கட்டும்.—’’

அதுவும் நோன்பின் திவ்விய நாட்களில் அந்தச் செல்வம் எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என அல்லாஹ் விரும்புகிறான். ஆனால் முழுதுமாக வாரியிறைத்துவிட வேண்டுமென்றும்அர்த்தமல்ல.

இதற்கு ஹதீஸ்ட் உண்டு. கடுமையானநோய்வாய்ப்பட்டிருந்த நாயகத் தேழ்ார்ஒருவர் தன்னை காணவந்திருந்த நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஷல்லம்) அவர்களை நோக்கி இறைவனின் திருத்தூதரே, என்னிடம் செல்வம் அனைத்தையும் ஏழைகள் நலனுக்காக கொடுத்துவிடப்போகிறேன் என்றார்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? ‘‘முதலில் உங்கள்செல்வத்திலிருந்து உங்களுடைய உறவினர்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு வழி செய்வது அவர்கள் பிறர்தயவில் வாழ்க்கைநடத்தவும் இரந்து உண்ணவுமான நிலைக்கு வருவதைவிடச் சிறந்ததாக இருக்கும்’’ என்றாலும் இதைச் சாககொண்டு பொருளை ‘‘புதையலாக்கி’’, பூதம்போல காக்கவும் குரங்குமனம் துணியக்கூடுமல்லவா!

அதையும் அருமறை ஆணித்தரமாக எடுத்துக்காட்டி இருக்கிறது.

பொருளைச் சேகரித்து (பயன்படுத்தாது) வைத்திருப்பதனையும் -நரக நெருப்பு அழைத்துக்கொள்ளும் (70-ம் அத். 17-ம், 18-ம் வசனங்கள்)

‘‘பொன்னையும், வெள்ளியையும் புதையலாக்கி வைத்துக்கொண்டுஅதனை அல்லாஹ்வுடைய (விருப்பமான) பாதையில் செலவு செய்யாதிருப்போருக்கும் கொடிய வேதனையைக் கொண்டு (நபியே) நீர் நல்லாசி கூறுவீராக’’ —9-ம் அத். 34-ம் வசனம்)

— தகவல்,

ஷாஹுல் முஹம்மது இபுறுகிம்

(வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

## ‘சேவையின் சின்னமாகத்திகழ்ந்தவர் கலாநிதி தியாகராசா’

(காரைநகர்)

‘‘கலாநிதி ஏ. தியாகராசா தன் வாழ்வின்பெரும்பகுதியை கல்விக்கும், மக்கள் சேவைக்கும் அர்ப்பணித்தவர். தமது மக்களுக்குச் சேவை செய்வதற்கு அரசியலில் புகுந்தார். சேவையின்சின்னமாகத் திகழ்ந்தார் அவர்.

இவ்வாறு முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்

முன்னாள் வட்டுக் கோட்டை எம்.பி. திரு. ஏ. தியாகராசாவின் நினைவுதினக் கூட்டம் அவர் அதிபராக இருந்த காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கே. சர்மா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், திரு. சுப்பிரமணியம் மேலும் பேசுகையில், பாராளுமன்ற ஆசனத்தை அமரர் தியாகராசா இழந்த பின்னர் ‘பொருளாதாரம்’ மீது காதல் கொண்டார். தனது அறுபத்தைந்தாவது வயதில் பொருளாதாரத்தில் காதல் கொண்டார்.

‘‘அமரர் தியாகராசா கால் நூற்றாண்டு பகுதி காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராக இருந்து சேவை செய்துள்ளார். பாராளுமன்றத்தில் ஏழு வருடங்கள் இருந்துள்ளார். அவர் பாடசாலைக்கும், காரைநகருக்கும் ஆற்றிய சேவைகள் என்றும் நிலையாக நிலைத்து நிற்கும்’’ என்றார்.

முன்னாள் உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்தியலிங்கம் பேசுகையில், மறைந்த தியாகராசா அவர்கள் கொள்கையுடன் வாழ்ந்த அரசியல்வாதி. கிராமப்பொருளாதாரத்தை வளர்ப்பதில் தன் சேவையை ஆரம்பித்தார். தன் சொந்தக் கிராமத்தில் இதனை ஆரம்பித்து, சமூக மட்டத்துக்குச் சென்று, நன் சேவையை அர்ப்பணித்தார். சூழ்நிலைகள் மாறாக இருந்த எந்தக் கட்டத்திலும், அவர் தன் கொள்கைகளை மாற்றியது கிடையாது என்றார்.

திரு. ஜீ. எம். செல்வரத்தினம், செல்வி பரமேஸ்வரி ஆகியோரும் பேசினார்.

## இலங்கை—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அவர்கள் தேசியவாதிகள்!

இந்த அனுபவங்களிலிருந்து புதுடில்லியில் இந்தியப் பிரதவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திக்கும் ஜனாதிபதி ஜே. ஆர். இலங்கையில் இனப் பிரச்னைக்கு சுமுகமான நல்லதொரு தீர்வுகாண்பதற்கு டில்லியிலேயே அத்திவாரமிட்டுக் கொள்வாரென எதிர்பார்ப்போம்.

டில்லிக்குத் தமிழ்த் தலைவர்களுக்கும் சென்றுள்ளனர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் செல்கிறார். சர்வகட்சிமாநாடு டில்லியில் நடைபெறுதென்றாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும்தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் நல்லதொரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு டில்லி வழி வகுக்கமுடியும்.

## செய்தித்'தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்'பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.


## 41-வது நாள் நினைவஞ்சலி



### கேசவன் கோவிந்தபிள்ளை

(மிருதங்க தொழில் நுட்பக் கலைஞர்)

தோற்றம்: 15–5–1919 மறைவு: 19–5–1984

எமது அன்புத் தெய்வமே, எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

திருமதி லஷ்மி கோவிந்தபிள்ளை,
திரு. திருமதி விஜயகுமார்,
(மகன் மருமகள்)

‘‘திருப்பதிவாசா’’,
192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (557)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—14 (28-6-1984)
வாரம்—வியாழன்
திதி—சதுர்த்தசி பகல்10-9ன் மேல் அமாவாசை
நட்சத்திரம்—மிருகசீரிடம் இரவு 8-28வரை

மேடம்: வீண்சச்சரவுகளால் மனம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச்செலவு அதிகரிக்கலாம் நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும்.

இடபம்: குடும்பத்தில் அமைதி நிலவும் சிலர் பெரியவர்களுடன் பகைத்துகொள்ள நேரிடும் இன்று பொறுமையை கடைப்பிடிக்கவும்.

மிதுனம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

கடகம்: நீண்டநாள் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று கிடைக்கலாம் அறிஞர்களின் ஆலோசனையும் கிடைக்கும்.

சிங்கம்: இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித் தரும் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

கன்னி: முயற்சிகளில் சிக்கல்கள் தோன்றும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் தொழில் துறைகளில் மேலதிகாரிகளின் கட்டளைக்குப் பணிந்து நடக்கவும்.

துலாம்: இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பலனைத்தரும் களஸ்திரவழியாலும் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு.

விருச்சிகம்: பிரயாணத்தில் பொருள்நழுவக்கூடும் சிலருக்கு உடல்நலமும் சிறிது பாதிக்கப்படும் நம்பிக்கை வைப்பதன் மூலம் பணமும் பறிபோகலாம்

தனுசு: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களிய் அதிக ஆர்வம் தோன்றும் பொதுப் பணியில் ஈடுபடுவதன் மூலம் பொது ஆதரவும் உண்டு.

மகரம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்ய விரும்புவீர் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம் நல்லதினம்.

கும்பம்: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும் கடந்த சில நாட்களாக நிலவிவந்த தயக்கநிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும் எதிர்பாராத அழைப்பிதழ்களும் கிடைக்கலாம்.

மீனம்: தானியத் துறையில் நஷ்டமேற்படலாம்கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூளக்கூடும் உடன் தொழிலாற்றுவோர் உளவு வேலையில் ஈடுபடுவர் தெய்வ நம்பிக்கை நன்று,

திருமலை
வே. ரவீந்திரன்

## அம்மன் ஆலய பொங்கல் விழா

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல்விழா அடுத்த மாதம் 9ம் திகதி வழமை போல் நடைபெறவிருக்கிறது.

## இன்றைய வானொலியில்

காலை

| | |
|---|---|
| 5.30 | நாதாஞ்சலி |
| 5,35 | பஜனைப் பாடல்கள் |
| 5.50 | பக்திப் பாடல்கள் |
| 6.00 | சைவநற்சிந்தனை |
| 6.05 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 6.10 | பாமாலை |
| 6.25 | நிகழ்ச்சிமுன்னோட்டம் |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | அறிவிப்புகள் |
| 6.50 | மெல்லிசைப்பாடல் |
| 7.00 | வயலின் — இராஜராஜேஸ்வரி சந்திரசேகரம் |
| 7.30 | மாகாணச்செய்திகள் |
| 7.35 | இசையமுதம் |
| 8.05 | வாத்தியமஞ்சரி |
| 8.15 | முஸ்லிம் நிகழ்ச்சி |
| 8.45 | காலை ஒலிபரப்பு முடிவு |

மாலை

| | |
|---|---|
| 6.00 | செய்திகள் |
| 6.10 | அறிவிப்புகள் |
| 6.20 | இப்தார் நிகழ்ச்சிகள் |
| 6.35 | திருவருள்நெறி |
| 7.05 | முஸ்லிம் நிகழ்ச்சி |

இரவு

| | |
|---|---|
| 8.00 | உலகச்செய்திகள் |
| 8.10 | இளஞ்சுடர் |
| 8.40 | உரைச் சித்திரம் ''விண்ணில் தொங்கும் மீன்கள்'-ரி.சபாரத்தினம் |
| 9.00 | செய்திகள் |
| 9.10 | செய்தியின் பின்னணியில் |
| 9.15 | அறிவிப்புகள்- பக்திப் பாடல் |
| 9.30 | பாட்டு — எம். ஆர். கோவிந்தராஜா |
| 10.30 | ஒலிபரப்பு முடிவு. |

## பெரும் பாதிப்பு

(கரவெட்டி)

நெல்லியடியிலுள்ள அரிசி ஆலை ஒன்றின் உமி, உமிச் சாம்பர், கழிவு நீர் போன்ற கழிவுப் பொருட்கள் தகுந்த முறையில் அகற்றப்படாது உள்ளதால்இதன்சுற்றுப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதாக யாழ்உள்ளூராட்சிஉதவி ஆணையாளருக்குமகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


# உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு




ஸ்சன்ஸ் இல., S/396

ஏஸ்-லோன் வீடு கட்டு வோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும்,ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு...

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட் கொருமுறைநாம் தரும் பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி. வீ. சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது;

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சீட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சிட்டையும் உறுதிச்சிட்டையும் கீழ்க்கண்டகூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானல் உங்கள் உறுதிச்சீட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன்மூலம் எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுகிறீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ

ரூ. 5000/முதல் ரூ15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ

ரூ. 2500/- முதல் ரூ. 5000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ

ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வன விற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் 5000/-.

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்;

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கொரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ______
முகவரி ______
கட்டிடத்தலத்தின்அமைவிடம் ______
குழாய்த்தொழிலாளரின் பெயர் ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ______ கையொப்பம் ______
இன்று பி.வி சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லொன்.
ஏன்? ______

கடைசி நாள் 15ஓகத்து 1984

விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

S-lon
நிகர் வேறில்லை

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்,
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ரஞ்சன்— அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
**திசைமாறிய பறவைகள்**
29-6-84
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
Sondra Currie in
POLICE WOMEN
(Color-Karate Film)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனிகாந்
**அன்புக்கு நான் அடிமை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt....
**NIGHT CROSSING**
Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45
கடைசி 4 தினங்கள் 7-00
Top entertainment of the Day. New way of Action Karate
**SHOGUN'S NINJA**
(Scope Color)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ரஜனிகாந்த்
**6-ல் இருந்து 60 வரை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-செசுார்ஜானகி
**மனிதனும் தெய்வமாகலாம்**
[புதிய பிரதி]

## அங்கீகாரம் பெறாத கட்டடங்கள்:

# ஒரு சதுர அடிக்கு 5 ரூபா அறவிடப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அங்கீகாரம் பெறாமல் கட்டப்படும் கட்டடங்களுக்கும், அங்கீகாரம் பெற்று அதற்குமாருகக் கட்டப்படும் கட்டடங்களுக்கும் சேவைக் கட்டணமாக . ஒரு சதுர அடிக்கு 5 ரூபா நகர அபிவிருத்தி அதிகார சபையினுல் அறவிடப்படுகின்றது. இந்த சேவைக் கட்டணம் அறவிடும் அதிகாரத்தை தாமதத்தை தவிர்க்கும் விதத்தில் மாநகர சபை ஆணையாளருக்கு வழங்க வேண்டும்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இதுவரை காலமும் தேவையானபோது இடிக்கலாம்என்று கட்டட உரிமையாளர்களுக்கும் மாநகரசபைக்கும் ஒப்பந்தம் இருந்துவந்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தற்போது இந்த ஒப்பந்தம் எதுவும் செய்யமுடியாது.

பிரதான வீதியிலிருந்து 32 அடி தூரத்திலும் இரண்டாம் பிரதான வீதியிலிருந்து 25 அடி தூரத்திலும் சாதாரண வீதியிலிருந்து 20 அடி தூரத்திலும் மதில்சுவர் கட்ட வேண்டும் என்பது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முடிவாகும்.

இந்த திட்டத்தை அமுல் செய்யமுடியாதநிலை யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இருக்கிறது என்றும் மக்கள் நெருக்கமாக வாழும் பாஷையூர், குருநகர், முஸ்லிம்பகுதி, நாவாந்துறையில் இத்திட்டத்தை அமுல் செய்வது கஷ்டம் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சனநெருக்கம் உள்ள சிறிய வீதிகளை கொண்ட பகுதியாக இருப்பதாலும் தொழில்காரணமாகவும் சமூகம் காரணமாகவும், வெளியில் போய் வசிக்கமுடியாதவர்களாக இருப்பதாலும் சட்டவிதிகளிலிருந்து இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் அதிகாரத்தை ஆணையாளருக்கு வழங்க வேண்டுமென்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவரை ஆணையாளர் கேட்டுள்ளார். (க)

## ரூபவாஹினியில் இன்று

| | |
|---|---|
| 5-30 | 'பிக்புளுமாபிள்' (ஆங்கிலம்) |
| 6-00 | 'ஹியர்ஸ் பூபர்' (ஆங்கிலம்) |
| 6-25 | நாட்டுவளம் |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | எதிர்காலநிகழ்ச்சிகள் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | நாடகம் (சிங்களம்) |
| 9-05 | வின்ட்ஸ் ஒப் வோர் (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'வின்ட்ஸ் ஒப் வோர்' தொடர்ச்சி |
| 10-30 | உலகச்செய்திகள் |
| 10-35 | நிகழ்ச்சிகள் முடிவு. |

# மடுமாதா உற்சவம்

(மன்னார்)

மடுமாதா ஆலய ஜூலை மாத உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இவ்வுற்சவம் எதிர்வரும் 2ம் திகதி இடம்பெறும் திருநாள் திருப்பலிப்பூசை மடுமாதா திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன்முடிவடையும்.

இரண்டாம் திகதி நடைபெறும் திருநாள் உற்சவத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மலேஷியா செல்வார்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான வேதாகம பாடசாலை பொறுப் பாசிரியரும், வேதாகம விற்பன்னருமான தெல்லிப்பழை. சிவஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா மலேஷியா கோலாலம் பூர் கந்தசுவாமி கோவிலில் கும்பாபிஷேக விழா விற்காக இங்கிருந்து அழைக்கப்பட்டுள்ளார்.

ஜூலை மாதம் 13ம் திகதி நடைபெறும் மேற்படி கும்பாபிஷேக விழா வில் இவர் சர்வசாதகராக கலந்து கொள்வார்.

இக்கும் பாபிஷேக விழாவில் இந்தியாவில் இருந்தும், இலங்கையிலிருந்தும் பல குருமார்கள் பங்கு பற்ற உள்ளனர்.

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும்.
Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,
**கொழும்பு ஸ்ருடியோ**

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல ஈடு 3518

1. டாக்டர் தியாகராசா இராசேந்திரம்
ஈஸ்வரி மருத்துவமனை, காங்கேசன்துறை

வாதி

சின்னத்தம்பி வைரமுத்துவும்
பெண் லீலாவதியும், மைலப்பாய்.
வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை.

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்ற கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ம் திகதி 16-7-84 திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபா 10640-ம், மேலும் 7,000-க்கு வருடமொன்றிற்கு நூற்றுக்கு 6 வீதம் வட்டிவீதம்வழக்குஅணைத்ததிகதியாகிய1980-ம்ஆண்டு மாசிமாதம் 26-ம் திகதியிலிருந்து தீர்வைத்தொகையாகிய 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ம் திகதி வரையுள்ள வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றிற்கு 5 வீதம் வட்டியும் வழக்குச் செலவு ரூபா 2964-25 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 970-35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 927-50 மேலதிக சமயாசமய செலவுரூபா1066-40) இதில் ரூபா 4,000 கழித்து

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்த்திரிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவில்ப்பற்று, தெல்லிப்பழை கிழக்கு இறை தவளை தோட்டம் விதைநிலம் தவளை தோட்டம் வேம்புவளவு நிலப்பரப்பு 7 கு, குழி 6¾ இதில் தெற்குப் பக்கமாக நிலப்பரப்பு 3 நின்று மிகுதி வடக்குப் பக்கமாய் நிலப்பரப்பு 4 குழி 6¾ வான்பயிர்களும் வீடும் இந்த நிலப்பரப்பு நாலும் குழி 6¾-ம் எல்லை கிழக்கு கந்தசாமி பெண் இராசாத்தியம்மாவிற்கும் நாகமுத்து செல்லையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனங்களும் வடக்கு கந்தப்பிள்ளை சின்னத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு ரோட்டு, தெற்கு சின்னத்தம்பி மகள் பஞ்சலட்சுமியின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதனடங்கும் தென்கிழக்கில் இருக்கும் கிணற்றிலும் கால்வாயிலும் இதற்குரிய பங்கும் வழமையான வழி வாய்க்காலுரித்தும்.

எச். 453 167.

க. நவரத்தினம்
நீதிமன்ற விற்பனையாளரும்,
மதிப்பாளரும்.

வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.
9-5-84

523

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1-12-1982


மறைவு:
28-06-83

**விவேதா செல்வரட்ணம்**

எமது அன்புச் செல்வமே
எமது குடும்ப முதலானவனே
மறைந்தும் மறையாத மாமணியே
எமது செல்வமாய் வளர்ந்துதித்து
வளமெலாம் வழங்கிய தெய்வீகச் செல்வமே
தீந்தமிழின் நறுஞ்சுவையே நீர் விண்ணிடை
அடைந்தபோதும் விரும்பிடும் எமது
உள்ளத்தை நண்ணியே பிரிந்திடாமல்
எம்நினைவினில் என்றும் வைத்தோம்
நிமலனுர்திருவடியில் நீடுவாழ்க.

செல்வரட்ணம் குடும்பத்தினர்.
Playground, Kalviankadu. (552)

## முதலாண்டு நினைவஞ்சலி



மண்ணுலகு
05-05-1916

விண்ணுலகு
09-07-1983

**திருமதி வேதநாயகி இராசரெத்தினம்**

[இராஜநாயகிப் படமாளிகை ஸ்தாபகரும் ஓய்வு பெற்ற ஓவசியருமான திரு. மா. இராசரெத்தினம் அவர்களது மனைவி]

"எம் வாழ்வின் ஒளியாக வாழ்ந்து, எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா இறைவன் இன்பத்தில் சாந்தியடைய பிராத்திக்கின்றோம்"

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை (527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கடைக்குள் வந்த இளைஞர் குண்டு வீசப்போவதாகக் கூறினார்"

## மரண விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"கடைக்குள் வந்து ஒருவர் எல்லோரையும் வெளியேறுமாறும் குண்டுவீசப்போவதாகவும் சத்தமிட்டார். நான் அவரை வெளியில் அழைத்து வந்தபோது, சிவில் உடையில் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியுடன் நின்றார் உடன் இளைஞர் குண்டை எறிந்தார். வெடிச் சத்தம் கேட்டது. பின்னர் இறந்தவர், தரையில் கிடப்பதை கண்டேன்"

கைக்குண்டு வீச்சுக்கு பலியான யாழ்ப்பாணம் ரி. கே. றேட்ஸ் ஊழியர் மரண விசாரணையில் உரிமையாளர் சின்னத்தம்பி குமாரசாமி நேற்று சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

சின்னத்தம்பி குமாரசாமி மேலும் கூறியதாவது: இறந்தவர் 21-ம் திகதி காலை 9-30 மணிக்கு கடையிலிருந்தார். அவர் காசுவாங்கும் மேசையில் இருந்தார். அந்த மேசை கடைக்கு முன்னால் உள்ளது.

### இளைஞர் வந்தார்

"நான் கடைக்குள்ளேசென்றேன். அப்போது ஒரு இளைஞன் சடுதியாக கடைக்குள் நுழைந்து உள்ளே சென்றார். மலகூடப்பக்கமாகச் சென்று கடையிலுள்ளவர்களை வெளியேறும்படியும் குண்டு வீசப் போவதாகவும் சத்தமிட்டார். நான் அவரிடம் சென்று ஏன் குண்டு எறியப் போகிறாய்? என்றுகூறி வெளியில்அழைத்து வந்தேன்.

### துப்பாக்கியுடன் நின்றார்

"அப்போது சிவில் உடையில் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியுடன் நிற்பதைக் கண்டேன். உடனடியாக இளைஞரால்குண்டு எறியப்பட்டது. வெடிச்சத்தம் கேட்டது. புகை மண்டலம் சூழ்ந்தது.

"புகை கலைந்த பின்பு இறந்தவர் தரையில் கிடந்ததைக் கண்டேன். அவரின் வயிற்றுப் பக்கத்திலிருந்து இரத்தம்பெருகிக்கொண்டிருந்தது. பக்கத்து ஆட்களின் உதவியுடன், ஒரு மினிவானில் அவரை ஆஸ்பத்திரிக்குஅனுப்பிவைத்தேன். பின்பு நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்துவிட்டு பொலிஸ் நிலையம் சென்றேன்.

### திகைப்பில் இருந்தேன்

"24ம் திகதி மாலை அவர் இறந்துவிட்டதாகஅறிந்தேன். அந்த நேரம் நான் திகைப்பில் இருந்தேன். அந்த இளைஞரின் கையில் கைக்குண்டுதான்இருந்தது ஆனல் வேறு துப்பாக்கி இருந்ததைக் காணவில்லை."

விற்பனையாளர் குமாரசாமி தவராசாவும் சாட்சியமளித்தார்.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (சு)

---

# ஆடு காப்பாற்றப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் திருடிச் சென்ற நல்ல இன் பால் ஆடு ஒன்றை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆட்டைக் கொண்டு சென்ற ஒருவரையும் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

யாழ். சிவன் பண்ணை வீதியில் வைத்து, யாழ்,பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு சார்ஜன்ட் வி. எட்வேட் சந்தேக நபரையும் ஆட்டையும் கைப்பற்றினர்.

பிலியந்தலையைச் சேர்ந்த சரீத் செல்வராசா (24வயது) என்பவரே கைது செய்யப்பட்டவராவர்.

கறுப்பு நிறமுள்ள இந்த ஆட்டின் உரிமையாளர் தகுந்த அத்தாட்சி காட்டி யாழ் பொலிஸ்நிலையத்துக்குச் சென்று பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

## இருமாணவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேதீஸ்வரன் என்ற மாணவர் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

---

## கடத்தல்காரர்கள்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்பொருட்களுடன் வந்த படகினை இந்திய சுங்கப் பகுதியினர் நெருங்கிய போது படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து விட்டனர் படகும் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

---

## பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டார் என்பதும் அவர் பதுளையிலிருந்து கொழும்பு குற்றவியல் நுண்ணாய்வுத் திணைக்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளாரென்பதும் 1984 ஜுலை 11ம் திகதி அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்பதும் பதுளைப் பொலிஸ் அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது பற்றி ஒரு மாதத்துக்குள் முடிவு அறிவிக்கப்படும்,

இவைதான் துணைவேந்தரால் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட முடிவாகும்.

துணைவேந்தரினால் விடுவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட அறிவித்தலைக் கொண்டு மாணவர்கள் தங்கள் விரிவுரைகளுக்காக வகுப்புகளுக்குச் செல்ல முடிவு செய்துள்ளதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். [மா)

---

## வடக்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி தெரிவிக்கையிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

புரட்கர ஐக்கிய முன்னணி என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் மாணவர்கள் சகலரும் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஒற்றுமைப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இதுகுறித்துஅனுராதபுரத்தில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார்.

---

## முழுஅளவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு செய்திருந்த நிகழ்ச்சியொன்றில் பேசுகையில அவர் இதனைத் தெரிவித்தார்.

"இலங்கையில் கடந்த ஜுலை மாதம் இடம் பெற்ற வன் செயல்களினால் பாதிக்கப்பட்டு 30'000க்கும் அதிகமானோர் தமிழகம் வந்துள்ளார்கள். இந்திய அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை செலுத்தி வருகிறது. முக்கியமாக இந்திய அரசு தம்மால் மேற்கொள்ளக்கூடிய சகல ராஜதந்திர முயற்சிகளையும் இலங்கைத் தமிழர் பிரச்னையில் செலுத்தி வருகிறது" (சூ)

---

## பஸ் ஓடிக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது: "நான் வ.போ.ச வில் 5 வருடம் கடமையாற்றுகிறேன், இம்மாதம் 24ம் தேதி மாலை 3-45 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து பலாலிவீதி ஊடாக கோண்டாவில் டிப்போவுக்குப் போனேம் சாரதி தளையசிங்கம், நான்,மற்றும் 11 ஊழியர்கள் பஸ்ஸில் சென்றோம். திருநெல்வேலி சந்தியிலிருந்து 100 யாருக்கு அப்பால் சென்றபோது வெடிச் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. நான் பஸ்ஸிற்குள் குப்புறப்படுத்துவிட்டேன்.

வெடிச் சத்தம் ஓய்ந்ததும் எழுந்துபார்த்தேன். பின்புற நுழைவாசல் ஆசனத்தில் கனகரத்தினம்மல்லாந்துகிடந்தார். இரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

### சாரதிக்கு காயம்

"சாரதி தளையசிங்கம் கன்னத்தில் இரத்தம் வழிந்தோட இருந்தார். தன்னை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லுமாறு கூறினார்.

"பணப்பெட்டியை காசாளர் கணேசன் வைத்திருந்தார். நான் அவரிடம்,காசுப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடுவோம் என்றேன். நானும் அவரும் காசுப்பெட்டியை எடுத்துக்கொண்டு கோண்டாவில் டிப்போ நோக்கிக் குறுக்கு வழியாக ஓடினேம். எங்களுடன் உதவி முகாமையாளர் தியாகராசாவும் வந்தார். இரண்டு மூன்று வீடுகள் தாண்டி, கம்பி வேலிகளைக் கடந்து ஓடிக் கொண்டிருந்தோம்.

### உரப் பையில் பணப்பெட்டி

"ஒரு வீட்டுக்காரரிடம் விஷயத்தைச் சொல்லி அவரிடம் உரப்பை ஒன்றைவாங்கி அதற்குள் பணப்பெட்டியைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு ஓடினேம்.

"டிப்போ அத்தியட்சகர் வீடு அருகில்தான் இருக்கிறது என்று வழியில் ஒருவர் கூறினார். நாங்கள் உடனே அத்தியட்சகர் வீட்டைநோக்கி ஓடினேம். காசாளரும், நானும், உதவி அத்தியட்சகர் தியாகராசாவும் போனேம்.

"டிப்போஅத்தியட்சகர்வீட்டில் நின்றார். அவரிடம் நடந்தவற்றைக்கூறினேம்காசுப்பெட்டியையும் ஒப்படைத்தோம். கனகரத்தினத்திற்கும், சாரதி தளையசிங்கத்திற்கும்காயமென்றும் அவர்களை உடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகுமாறும் டிப்போஅத்தியட்சகரிடம் கூறினேம்.

"பின்பு பொலிஸ் நிலையம் சென்றபோது அங்கு கனகரத்தினம் இறந்துவிட்டதாகஅறிந்தேன். நான் போய்ப் பார்க்கவில்லை. பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்."

விசாரணை [illegible] ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெகதீஸ்வரி யோகரட்ணம்

### (ராசாத்தி)

கலட்டியைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி (ராசாத்தி) காலமானார் இவர் இளைப்பாறிய நிலஅளவை அத்தியட்சகர் யோகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சுதன் [பொறியியலாளர், சவுதி அரேபியா], நரேயன் [பொறியியலாளர், லண்டன்), குகன், மிதிலா (முன்னாள் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அருமைத் தாயாரும், கண்ணம்மாவின் அன்பு மாமியாரும், நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு மாஸ்டரின் மகளும், காலஞ்சென்ற சேனாதிராசா, தையல்நாயகி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, பாலச்சந்திரன், தில்லைராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராசா (பொறியியலாளர், பிரான்ஸ்), யோகமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். இவரது ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [28-6-1984] மாலை நான்கு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

565

---

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் மூத்ததம்பி

திரு. வல்லிபுரம் மூத்ததம்பி (திருநெல்வேலி, ஓய்வு பெற்ற கல்வித் திணைக்கள கட்டிடப் பரிசோதகர்) காலமானார். அன்னார் காலஞ்சென்ற மதியாபரணத்தின் மருமகனும், சுகிர்தலட்சுமியின் அன்புக் கணவரும், Dr. சிறீகணேசன் [இங்கிலாந்து], சந்திரோதயம் (இங்கிலாந்து), காலஞ்சென்ற இளமுருகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. புனிதவதி (இங்கிலாந்து), Dr. பாலேந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும், வத்சலா, சியாமளா, முரளி ஆகியோரின் பேரனும், நடராசா, நாகேந்திரன், இரத்தினம், பாக்கியம், செல்வம், பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், S. பொன்னம்பலம், S. சுப்பிரமணியம், காலஞ்சென்ற E.நடேசன், T. பொன்னம்பலம் மகாலட்சுமி, காலஞ்சென்ற நவநீதம், செல்வராசா, முத்துலிங்கம், இந்திராணி, ராஜபூபதி, முத்துராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமைக்கிரிய்யகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, [28-6-84] இன்று காலை 09-30 மணியளவில் பூதவுடல் திருநெல்வேலி மயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கோணமலை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

559

---

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா வயித்திலிங்கம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற அ. வயித்திலிங்கத்தின் அன்பு மனைவி அன்னம்மா காலமாகிவிட்டார். இவர் கனகரட்னம் (இளைப்பாறிய லிகிதர்) உடுவில், அருணாசலம் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) நுணாவில் கிழக்கு, நடராசா (இளைப்பாறிய லிகிதர்) ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் (இளைப்பாறிய அலுவலக அதிபர்) கொடிகாமம், திருமதி அன்னலட்சுமி செல்லையா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 28-6-84 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 3-30 மணியளவில் நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

556

---

## மரண அறிவித்தல்

### கனகசபை இராமலிங்கம்

கைதடி, காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற நீர்வேலி மலாயன் பென்சனியர் திரு. வைத்திலிங்கம், திருமதி வைத்திலிங்கம் தம்பதிகளின் மருமகனும், முன்னாள் மலாயன் புகையிரத நிலைய அதிபருமான கனகசபை இராமலிங்கம் 27-6-84 அன்று காலமானார். அன்னார் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், சுகுணசபேசன் [U. K.], சுகுணாம்பிகை [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்], கனகாம்பிகை [பிரான்ஸ்], சுசிலா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், டிலியா (U. K.), ஆனந்தநடேசன் [ஓமான்], ரவீந்திரன் [பிரான்ஸ்], ராஜகுலேந்திரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மினா, சங்கீதா, புருசோத், டொமினிக், பமீலா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகைகளுக்காக 28-6-84 வியாழக்கிழமை இன்று காலை 10 மணிக்கு இல: 12, நல்லூர் குறுக்குத் தெருவிலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

558

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org